யாதும் ஊரே யாவரும் கேளிர்

# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்

# சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மகாநாடு

பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். குறள். 975


மாநாட்டுச் செயலகம்
உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்
இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா
IMTC UK & Europe

## இங்கிலாந்திலுள்ள, உலகத் தமிழர் வரலாற்று வளாகம்

## ஆக்ஸ்போட்டில் 29, 30 ஆகஸ்ட் 2026 நடைபெறும்.

## உ. த. ப. இ. கனடா தலைமையகம் IMTC கனடா தலைமையகம்





உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச தமிழ் மாநாடு (அனைத்து நாட்டு தமிழ் மாநாடு) (தமிழ்ப் பண்பாட்டு சர்வதேச இயக்கத்தின் சர்வதேச மாநாடு)

தொன்மைவரலாறு கொண்ட தமிழரின் தனித்தன்மைமிக்க கலைநிகழ்ச்சிகளைப் போற்றுதல், இலக்கியப் பண்பாட்டுக் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் நடத்துதல் போன்ற செயல்பாடுகள் வாயிலாகத் தமிழ்ப் பண்பாட்டை வரும் தலைமுறைக்குக் கொண்டு சேர்த்தல், தமிழ் கல்வியை ஊக்குவித்தல், உலகெங்கும் வாழும் தமிழர்களிடையே பிணைப்பை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ எனும் முதுமொழிக்கு இணங்க உலகளாவிய நிலையில் இயங்கிவரும் அமைப்பு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தமிழ்க் கலாச்சாரத்திற்கான சர்வதேச இயக்கம் – IMTC). இவ்வமைப்பு வரும்

2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29, 30 ஆகிய நாட்களில்
**‘தமிழரின் வெளி வரலாறு’** என்னும் பொருண்மையில்

அனைத்து நாடுகளின் மாநாட்டினை இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போட் மாநகரில் நடத்தப்படுகிறது.

கடந்த 300 ஆண்டுகளுக்கும் மேலாகப் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் தங்களின் தனித் தடங்களைப் பதிந்துள்ளனர். அவர்களின் வாழ்வியலைப் பற்றிய ஆய்வுகளை இன்று, தமிழர்கள் அல்லாத தமிழியலாளர்களும் வழங்குகின்றனர். அப்பெருமக்களின் அயராத முயற்சியால் இந்நாளில் உலகம் முழுவதும் ஒளிரும் உலகளாவிய மொழியாகச் செம்மொழியாம் தமிழ் திகழ்கிறது.

ஐரோப்பா, அமெரிக்கா,ஆசியா, ஆப்பிரிக்கா, ஸ்காண்டிய நாடுகள்... தமிழும் தமிழர் வாழ்வியலும் குறித்த ஆய்வுகளின் நடுவணாக நிலைபெற்றுள்ளன. இவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கும் தொடர்வதற்குமான முன்னெடுப்புகளை இம்மாநாடு மேற்கொள்கிறது. அதன் உரிப்பொருள் சார்ந்த சொல்லாடல்கள், ஆய்வரங்கங்கள், கவின்கலை நிகழ்ச்சிகள், நூல் வெளியீடுகள், தமிழர் தொன்மையினைத் தெரிவிக்கும் கண்காட்சிகள் எனப் பல்வற்றையும் கொண்டதாய் இம்மாநாடு அமையும்.

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு, இசை மற்றும் நடனம், பாரம்பரிய தொல்பொருள் ஆராய்ச்சி, கல்வித்திறன், வணிக வெற்றி, சமயத் தொண்டு, சமூகத்திற்கான சேவைகள் ஆகியவற்றில் சிறந்து விளங்கியவர்களைப் போற்றும் வகையில் ஆகஸ்ட் 31, 2026 அன்று பிரிதானியா நாடாளுமன்றத்தில் விருது வழங்கிக் கவுரவிக்கும் விழா நடைபெறும்.

“தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் !”

**மாநாட்டு நிறைவில் சுற்றுலா இடம்பெறும்.**
**இம்மாநாடு சிறப்புறத் தங்களின் ஈடுபாட்டையும் பங்கேற்பையும் மாநாட்டுக் குழு வேண்டி அழைக்கிறது. மாநாட்டு உரிப்பொருட் களங்கள் (தலைப்புகள், நிகழ்ச்சி)**

1. அகழாய்வுகள் வெளிப்படுத்திய தமிழரின் தொன்மை
2. அடக்குமுறைகளுக்கிடையே ஆர்த்தெழும் தமிழ்
3. அடிமைகளாக அல்லலுற்ற தமிழர்கள்
4. அமெரிக்காவில் தமிழர்கள்
5. அய்ரோப்பிய சமயச் சான்றோர்களின் தமிழ்த் தொண்டு
6. அய்ரோப்பிய நாடுகளில் தமிழர் அன்றும் இன்றும்
7. ஆங்கிலக் கல்வியும் தமிழர்களின் எழுச்சியும்
8. ஆசிய நாடுகளில் போதிதர்மரின் தாக்கம்
9. ஆஸ்ரேலியாவில் தமிழர்கள் நிலை
10. இலங்கை நாட்டுப் புலம் பெயர்ந்த தமிழர்கள்
11. இலக்கியங்கள் காட்டும் தமிழர் புலம்பெயர்வு
12. ஈழத்தமிழர்களின் தமிழ்த்தொண்டு
13. ஈழத்தமிழர்களும் தமிழ்த் தாய்நாடும்
14. உருசிய நாட்டில் தமிழர்கள்
15. உரோமானிய, கிரேக்க, அரபு நாடுகளில் தமிழர் குடியேற்றங்கள்
16. உலகளாவிய தமிழ்வளர்ச்சி அமைப்புகள்
17. எங்கும் பரவியிருக்கும் ஈழத்தமிழர்கள்
18. கனடாவில் தமிழர்கள்
19. கிரியோல் மொழிகளில் தமிழ்
20. கிரேக்கம், ரோம் நாடுகளுடன் பண்டைய தமிழர்கள் வணிகம்
21. கொரியாவில் தமிழ்ப் பண்பாடு
22. சமயம் தவிர்த்த தமிழர்கள்
23. சீனாவில் தமிழ்ப் பண்பாடு
24. செஷல்ஸ் (சீஷெல்ஸ்) தீவில் தமிழ்ப் பண்பாடு
25. தமிழரின் கவின் கலைகளும் நிகழும் கலைகளும்
26. தமிழரின் புலம் பெயர்வு - ஒரு கண்ணோட்டம்
27. தமிழர்களின் நிகழ்த்து கலைகளும் கவின் கலைகளும்
28. தமிழும் திராவிடமல்லாப் பிற இந்திய மொழிகளும்
29. தமிழும் இந்திய மொழிகளும்
30. தமிழும் சுமேரிய மொழிகளும்
31. தமிழும் செமிட் மொழிகளும்
32. தமிழைத் தலைநிமிர்த்திய பிற நாட்டு அறிஞர்கள்
33. தமிழ்க் கற்றுக்கொள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் எதிர்கொள்ளும் இடர்கள்
34. தமிழ் மரபிற்குத் தடம் பதிக்கும் திருக்குறள்
35. தமிழ்க் கல்விக்கு ஊக்கமளிக்கும் உலக நாடுகள்
36. தமிழ்ப் பண்பாட்டுப் பகிர்வும் சிதைவும்
37. தரணியெங்கும் தமிழ் மருத்துவம்
38. தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாடு
39. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தமிழ்ப் பண்பாடு
40. தென்கிழக்கு நாடுகளின் இணைப்பிற்குப் பவுத்தத்தின் பங்கு
41. பண்டைய பட்டுப் பாதையும் நறுமணப் பாதையும்
42. பண்பாட்டு உறவில் தமிழர்கள்
43. பாபிலோனியா, யுதேயா (இஸ்ரேல்), சிரியா, அரபு நாடுகளுடன் பண்டைத் தமிழர் வணிகம்
44. பிரான்ஸ்நாட்டில் தமிழர்கள்
45. பிரிட்டன் நாடுகளில் தமிழ்
46. பிற்காலச் சோழர்களின் படையெடுப்புகளால் ஏற்பட்ட பண்பாட்டுத் தாக்கம்
47. பிஜி தோட்டங்களில் தமிழர் குடியேற்றம்
48. புலம்பெயர்ந்த தமிழர்களுக்கான தமிழ்மொழிக் கல்வி
49. புலம்பெயர்ந்த தமிழர்கள் போற்றுகின்ற தமிழர் அடையாளங்கள்
50. மணிமேகலை காட்டும் பண்டைத் தமிழர் குடியேற்றங்கள்
51. மொரிஷியஸில் தமிழ்ப் பண்பாடு
52. ரீயூனியன் தீவில் தமிழ்ப் பண்பாடு
53. ஜப்பானின் தமிழ்ப் பண்பாடு
54. ஜெர்மனியில் தமிழர்கள்
55. தமிழர் வெளி வரலாற்றுக்குத் தொடர்புடைய பிற தலைப்பு

### பிற குறிப்புகள்

ஆய்வுக் கட்டுரைகள் A4, 1½ இடைவெளி 8 பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

ஆய்வுக் கட்டுரைகளில் APA வடிவமைப்பைப் பின்பற்ற வேண்டும்.

ஆய்வுச் சுருக்கத்தோடு பங்கேற்புப் பதிவுப் படிவம் அனுப்பப்பட வேண்டும்.

நிகழ்த்து கலை, கவின் கலை வல்லுநர்கள் மாநாட்டில் பங்கேற்கலாம். அவர்கள் தங்கள் பங்கேற்பு பற்றிய தகவல்களைத் தெரிவிக்க 2026 மே இறுதி வரை நீடிக்கப் பட்டுள்ளது.

ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்குவோர் தங்கள் ஆய்வின் சுருக்கத்தை 30 ஏப்ரல் 2026 அன்று அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், மேலும் முழு கட்டுரை 31 மே 2026, அதற்கு முன் வந்தடைய வேண்டும்.

**பதிவு நிறைவு நாள் : கட்டுரையுடன் 31 மே2026**

பதிவுக்கட்டணம்:

அனைத்துப் பத்திரிகைத் தொகுப்பாளர்களும், பங்கேற்பாளர்களும் பதிவுக் கட்டணமாக USD 700 செலுத்த வேண்டும். கட்டணத்தில் தங்குமிடம், உணவு மற்றும் உள்ளூர் போக்குவரத்து ஆகிய 3ம் அடங்கும்.


**மாநாட்டு செயலகம் - உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்**
**பிரித்தானியா மற்றும் ஐரோப்பா (IMTC UK & EUROPE)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு. சிவா பிள்ளை | (கனடா) | 0014168996044 | திரு. இராய சூரியர் | (ஜெர்மனி) | 004917632075528 |
| திரு. கணேசலிங்கம் | (ஜெர்மனி) | 004915218626482 | விரிவுரையாளர் கணேசராஜ் | (இங்கிலாந்து) | 00447375488434 |
| Dr. பூலோகநாதன் | (அவுஸ்திரேலியா) | 0061413099789 | Dr. சுமதி | (இங்கிலாந்து) | 0447727170532 |
| சட்டத்தரணி அமுது இளஞ்செழியன் | (இங்கிலாந்து) | 00447939474342 | திரு. தங்கராஜா | | 00447768 005960 |
| திரு. வசந்தகுமாரன் | (இங்கிலாந்து) | 00447853654518 | திரு. விமலதாசன் | | 00447801 568925 |

**ஆய்வுக் கட்டுரைகளை imtcuk@mail.comக்கு அனுப்பவும்**

www.imtcuk.com